உம்முடைய வசனமே சத்தியம். யோவான் 17:17

# ஐந்தாம்
# உலக பேரரசு

பாடம் - 8



## வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

## பாடம் : # 8

## ஐந்தாம் உலக பேரரசு

**உங்கள் கவனத்திற்கு :** **ஒவ்வொரு வசனக்குறிப்பையும், தயவுசெய்து உங்கள் வேதாகமத்திலிருந்து முழுமையாக வாசித்தறியவும்.**

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே!

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே இன்று நாம் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்த சத்தியத்தை தியானிக்கலாம்.

**இது எவ்விதமான ராஜ்யம்?**

**இந்த ராஜ்யமானது எப்பொழுது வரும்?**

**மேலும் இந்த ராஜ்யம் எவ்வாறு ஸ்தாபிக்கப்படும்?**

வேதாகமத்தின் முக்கியமானது, அதிலும் விசேஷமாக புதிய ஏற்பாட்டின் முக்கிய உபதேசத்தைக் குறித்த எல்லா கேள்விகளுக்குமான பதில்களை இன்று நாம் ஆராயலாம்.

யோவான் ஸ்நானகனுடைய முதல் பிரசங்கமும் இந்த ராஜ்யத்தை பற்றி இருப்பதை நாம் பார்க்கிறோம்.



**மத்தேயு 3:1,2**

**"....மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம் பண்ணினான்."**



அது போலவே, இயேசுகிறிஸ்துவின் முதல் பிரசங்கமும் இந்த ராஜ்யத்தைப் பற்றின பிரசங்கமாகவே இருந்தது.

**மத்தேயு 4:17**

**“அது முதல் இயேசு.... மனந்திரும்புங்கள். பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார்.”**

மேலும், இயேசு கூறிய 39 உவமைகளும் இந்த ராஜ்யத்தைக்குறித்ததாக இருந்தது.

உண்மையில் மத்தேயு 13ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள 7 உவமைகளும் “ராஜ்யத்தின் உவமைகள்” என்றே அழைக்கப்படுகிறது.

இயேசு அவருடைய சீஷர்களுக்கு கற்றுக்கொடுத்த ஜெபத்திலும் இந்த ராஜ்யத்தைப் பற்றியும் அதற்காக ஜெபிக்க வேண்டும் என குறிப்பிடுகிறார். இதை மத்தேயு 6:10 ல் வாசிக்கலாம்.

**மத்தேயு 6:10**

**“உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக.”**

இயேசு பிரசங்கித்த சுவிசேஷமும் கூட ராஜ்யத்தின் சுவிசேஷம் என்றே அழைக்கப்படுகிறது.

**மத்தேயு 9:35**

**“பின்பு, இயேசு சகல பட்டணங்களையும் கிராமங்களையும் சுற்றி நடந்து, ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தை பிரசங்கித்து....”**

சீஷர்களும் பிரசங்கிக்க அனுப்பப்படும் போது ராஜ்யத்தைப் பற்றி பிரசங்கிக்கவே கேட்டுக்கொள்ளப்பட்டார்கள்.

**மத்தேயு 10:7**

**“போகையில், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கியுங்கள்.”**

இதன் மூலம், தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்த காரியங்கள் வேதத்திலும், அதே சமயம் இயேசுவுக்கும் அவருடைய சீஷர்களுக்கும் எவ்வளவு முக்கியமாக இருந்தது என்பதை நாம் வாசித்த வசனங்கள் மூலமாக அறிந்து கொள்ளலாம்.



**ஆனால் இன்றைய கிறிஸ்தவர்கள் மத்தியிலும் சபைகளிலும் இந்த ராஜ்யத்தைப் பற்றிய காரியங்கள் ஏன் பேசப்படுவதில்லை?**

**இன்றைய கிறிஸ்தவர்கள் மத்தியிலும் சபைகளிலும் இந்த ராஜ்யத்தைப் பற்றின காரியங்கள் போதிக்கப்படாததற்கான காரணம் என்ன?**

இதற்கான காரணத்தை ஒரு வசனத்தில் வாசிக்கும்போது,

**லூக்கா 17:20,21**

**"தேவனுடைய ராஜ்யம் எப்பொழுது வருமென்று, பரிசேயர் அவரிடத்தில் கேட்ட போது அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக தேவனுடைய ராஜ்யம் பிரத்தியட்சமாய் வராது. இதோ, இங்கே என்றும் அதோ, அங்கே என்றும் சொல்லப்படுகிறதற்கும் ஏதுவிராது. இதோ, தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே என்றார்."**

ஆம், இதுவே காரணமாக இருக்கிறது.

அதாவது, தேவனுடைய ராஜ்யம் ஜனங்களின் இருதயத்தில் இருக்கவேண்டுமே தவிர சொல் அர்த்தமாக பூமியில் ஸ்தாபிக்கப்படும் ராஜ்யம் அல்ல என்பது பொதுவான கருத்தாக இருக்கிறது.

ஆகவே உலகத்தை மாற்றுவதற்கும் ஜனங்களுடைய இருதயத்தில் தேவனுடைய ராஜ்யத்தை ஸ்தாபிப்பதற்கும், சுவிசேஷ வேலைகள் அநேகம் மேற்கொள்ளப்பட்டு எல்லாரையும் கிறிஸ்தவர்களாக மாற்ற முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

**இது சரியா?**

**லூக்கா 17:20**-தை கவனமாக வாசிக்கும்போது,

இயேசு பரிசேயரிடம் பதில் கூறியும் பேசிக்கொண்டும் இருந்தார் என்றும் அவர்களை வெளிப்படையாக **"மாயக்காரரே"** என்றும்

**"வெள்ளையடிக்கப்பட்ட கல்லறை"** என்றும் குறிப்பிடுகிறார். **(மத்தேயு 23:27)**



**அப்படியென்றால், இயேசு தேவனுடைய ராஜ்யம் பரிசேயருடைய இருதயங்களில் இருக்கும் என்றா குறிப்பிட்டார்?**

**நிச்சயமாக இல்லை.**

**பின்பு இயேசு குறிப்பிடுவது என்ன?**

இதற்கான பதிலை காண மேற்கண்ட வசனத்தை நாம் புதிய மொழி பெயர்ப்பில் காணலாம்.

**"....தேவனுடைய ராஜ்யம் உங்கள் மத்தியில் இருக்கிறது..."**

இங்கு, **"உங்கள் மத்தியில்"** என்று கொடுக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

இதன் மூலம் இயேசு கூறியதை சரியாக உணரும் பொழுது அவர் தேவனுடைய ராஜ்யம் பகிரங்கமாக மனுஷருக்குக் காணப்படாமல், இரகசியமாக ஸ்தாபிக்கப்படும் என்றும், அது ஸ்தாபிக்கப்படுவதை சிலர் மட்டுமே உணர்ந்து கொள்ளுவார்கள் என்றும் கூறுகிறார்.

மேலும், கொஞ்ச காலம் சென்ற பின்பு அதை உணர்ந்து, தேவனுடைய ராஜ்யம் ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்டு, அவர்கள் மத்தியில் இருப்பதை அறிந்து கொள்வார்கள் என்று இயேசு குறிப்பிடுகிறார்.

**ஆகவே தேவனுடைய ராஜ்யம் உண்மையான ராஜ்யம் என்றும், இந்த ராஜ்யம் உலகம் அனைத்தையும் ஆண்டுகொள்ளும் என்றும் காண்கிறோம்.**

உண்மையில் தேவனுடைய ராஜ்யம் வெகு காலத்திற்கு முன்னதாகவே இந்த உலகத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

**எப்பொழுது? என்று உங்களால் சொல்லமுடியுமா?**

**ஆம். இந்த ராஜ்யம் ஏதேன் தோட்டத்தில் இருந்தது.**



தேவன் ஆதாமை ராஜாவாக நியமித்து இந்த பூமியை அவருடைய ஆளுகைக்கு உட்படுத்தியிருந்தார். இதைக்குறித்து ஆதியாகமத்தில் வாசிக்கலாம்.

**ஆதியாகமம் 1:26**

**“.....சகல பிராணிகளையும் ஆளக்கடவீர்கள் என்றார்.”**

ஆம். இந்த அதிகாரம் மற்றும் ஆளுகையை பற்றி கீழுள்ள வசனத்தில் வாசிக்கையில்,

**சங்கீதம் 8:5**

**“....மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர்....”**



ஆனால் நாம் கவனிக்கையில்
வெகு சீக்கிரத்தில் ஆதாம்
அவருடைய கிரீடத்தையும்
ராஜ்யத்தையும்
இழந்தார்.



அது முதல், ஆதாமும்
அவர் சந்ததியும்
அடிமைகளாகவும்,
சாத்தானும் அவன்
தூதர்களும் அவர்களை
ஆளுகிறவர்களானார்கள்
.

ஆம், சாத்தான் பிடுங்கப்பட்ட அதிகாரத்தை பயன்படுத்தி அவனுடைய ராஜ்யத்தை மக்கள் மத்தியில் ஸ்தாபித்து அவர்களை ஆளத்தொடங்கினான்.

இதற்குப்பின்பு மனிதர்கள் அவர்களைப்போல் மனிதர்களை அடிமைப்படுத்தி அவர்களை ஆளத்தொடங்கி ராஜ்யங்களை ஸ்தாபித்தார்கள்.

இது தேவனுடைய சித்தம் அல்லவே. இருந்தாலும், மனிதர்கள் சில பாடங்களை கற்றுக்கொள்வதற்காக தேவன் சில காலங்களுக்கு இதை அனுமதித்திருக்கிறார்.



இவைகளுக்கிடையில், தேவன் நிழல் ராஜ்யத்தை அவருடைய ஜனமாகிய இஸ்ரயேல் மத்தியில் ஸ்தாபித்தார்.

இஸ்ரயேலின் ராஜாக்கள் "தேவனுடைய சிங்காசனத்தில் அமர்ந்தார்கள் என்று கீழுள்ள வசனத்தில் வாசித்தறியலாம்.

**1 நாளாகமம் 29:23**

**"அப்படியே சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீதின் ஸ்தானத்திலே கர்த்தருடைய சிங்காசனத்தில் ராஜாவாய் வீற்றிருந்து பாக்கியசாலியாய் இருந்தான். இஸ்ரவேலர் எல்லாரும் அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தார்கள்."**

இந்த ராஜ்யம் இஸ்ரயேலின் கடைசி ராஜாவாகிய சிதேக்கியா வரைக்கும் நீடித்திருந்தது. இந்தப் பொல்லாத ராஜாவைக்குறித்து தேவன் தீர்க்கதரிசியான எசேக்கியேல் மூலமாக சொன்ன வார்த்தைகளை கவனிப்போம்.

**எசேக்கியேல் 21:25-27**

**"இஸ்ரவேலை ஆளுகிற அவபக்தியுள்ள துன்மார்க்க அதிபதியே, அக்கிரமத்துக்கு முடிவு வரும் காலத்தில் உன் நாள் வந்தது. பாகையை கழற்று, கிரீடத்தை எடுத்துப்போடு; அது இனி முன்போலிராது; தாழ்ந்தவனை உயர்த்தி, உயர்ந்தவனை தாழ்த்துவேன். அதை கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன், உரிமைக்காரரானவர் வருமட்டும் அது இல்லாதிருக்கும், அவருக்கே அதைக் கொடுப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்."**

இப்படியாக, நிழலான தேவனுடைய ராஜ்யம் இஸ்ரவேலில் ஒரு முடிவுக்கு வந்தது. அதற்குப்பின்பு தேவன் புறஜாதிகளுக்கு ஆளக்கூடிய அதிகாரத்தை அனுமதித்தார்.

இது வேதாகமத்தில் "**புறஜாதிகளின் காலம்**" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. (லூக்கா 21:24)



இந்தப் புறஜாதிகளின் காலத்தைக் குறித்த பாடத்தை நாம் வரக்கூடிய பாடங்களில் விளக்கமாக பார்க்கலாம்.

ஆனால் எசேக்கியேல் 21:27-ம் வசனத்தில் சொல்லப்பட்ட வார்த்தைகளை கவனிக்கும் போது,

**"உரிமைக்காரரானவர் வருமட்டும் அது இல்லாதிருக்கும், அவருக்கே அதை கொடுப்பேன்..."**

இங்கு **"உரிமைக்காரர்"** என்று நம்முடைய ஆண்டவராம் இயேசுவைப்பற்றி சொல்லப்படுகிறது. **வரக்கூடிய** தேவனுடைய ராஜ்யத்திற்கு இயேசுவே ராஜாவாக இருந்து அரசாளுவார்.

ஆனால், இந்தக் காரியம் இயேசுவின் முதலாம் வருகையில் நடைபெறாமல் அவருடைய **இரண்டாம் வருகையில்** நிறைவேறக்கூடியதாய் இருக்கிறது.

இதை யூதர்கள் புரிந்துகொள்ளவில்லை. அவர்கள் (எசாயா 9:6) வசனத்தில் உள்ள **"கர்த்தத்துவம் அவர் தோளின் மேல் இருக்கும்...."** காரியத்தை தவறாக புரிந்துகொண்டு,



இயேசுவின் இரண்டாம் வருகையில் நடைபெறவேண்டிய காரியங்களை அவருடைய முதலாம் வருகையில் எதிர்ப்பார்த்தார்கள்.

அதுமுதல் இன்று வரை கிறிஸ்தவர்கள், இயேசு கற்பித்த ஜெபத்தை அன்றாடம் சொல்லிக்கொண்டிருந்தாலும், **"உம்முடைய ராஜ்யம் வருக...."** என்ற ஜெபத்தின் பொருளை புரிந்துக் கொள்ள முடியாதவர்களாக இருக்கிறார்கள்.



யூதர்கள் அவருடைய **ராஜ்யத்தை பூமிக்குரியதாக** எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.



கிறிஸ்தவர்களோ **பரலோகத்திற்குரியதாக** அந்த ராஜ்யத்தை எதிர்பார்த்து கொண்டு இருக்கிறார்கள்.

ஆனால் அவருடைய **ராஜ்யம் பூமிக்குரியதாகவும், பரலோகத்துக்குரியதாகவும்** ஸ்தாபிக்கப்பட போகிறது என்பதே சத்தியமாக இருக்கிறது.

**தேவனுடைய பரிசுத்த சித்தம் பாவத்திலும், மரணத்திலும் இருக்கிற இந்த உலகத்தில் நிறைவேறும் என்று நம்புகிறீர்களா?**

நிச்சயமாக தேவனுடைய ராஜ்யம் பூமிக்கு வரும் போது அவருடைய சித்தம் நிறைவேறும் என்று நாம் வாசிக்கிறோம். மேலும், தேவன் அவருடைய ராஜ்யம் எப்பொழுது வரும் என்றும் அது எவ்விதமாக வரும் என்றும் கூட நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்.

இதை ஒரு தீர்க்கதரிசனத்தில் நாம் காணலாம்.

தானியேலின் புத்தகத்தில் 2ம் மற்றும் 7ம் அதிகாரங்களில் தேவன் இரண்டு சொப்பனங்கள் மூலமாக இரண்டு பேருக்கு இதை வெளிப்படுத்தி இருக்கிறார்.



1. **ராஜாவாகிய – பாபிலோனின் அரசன் நேபுகாத்நேச்சார்.**
2. **தேவனுடைய தீர்க்கதரிசியான – தானியேல்.**

நாம் இப்பொழுது 2600 வருடங்களுக்கு முன்பாக காண்பிக்கப்பட்ட சொப்பனங்களின் விளக்கத்தையும், அதில் அன்று முதல் இன்று வரை இருக்கக்கூடிய ஆட்சி காலங்களை குறித்து சொல்லப்பட்டிருப்பதையும் நாம் அறியலாம்.

நாம் தானியேல் 2ம் அதிகாரத்தை வாசித்து ஆரம்பிப்போம்.

## தானியேல் 2:1-11

**"நேபுகாத்நேச்சார் ராஜ்யபாரம் பண்ணும் இரண்டாம் வருஷத்திலே, நேபுகாத்நேச்சார் சொப்பனங்களைக் கண்டான்; அதினால், அவனுடைய ஆவி கலங்கி, அவனுடைய நித்திரை கலைந்தது.**

**அப்பொழுது ராஜா தன் சொப்பனங்களைத் தனக்குத் தெரிவிக்கும்பொருட்டு சாஸ்திரிகளையும் ஜோசியரையும் சூனியக்காரரயும் கல்தேயரையும் அழைக்கச்சொன்னான்; அவர்கள் வந்து, ராஜ சமூகத்தில் நின்றார்கள். ராஜா அவர்களை நோக்கி: ஒரு சொப்பனம் கண்டேன்; அந்த சொப்பனத்தை அறியவேண்டுமென்று என் ஆவி கலங்கியிருக்கிறது என்றான். அப்பொழுது கல்தேயர் ராஜாவை நோக்கி: ராஜாவே, நீர் என்றும் வாழ்க; சொப்பனத்தை உமது அடியாருக்குச் சொல்லும், அப்பொழுது அதின் அர்த்தத்தை விடுவிப்போம் என்று சீரிய பாஷையிலே சொன்னார்கள். ராஜா கல்தேயருக்குப் பிரதியுத்திரமாக: என்னிடத்தில் பிறக்கிற தீர்மானம் என்னவென்றால், நீங்கள் சொப்பனத்தையும் அதின் அர்த்தத்தையும் எனக்கு அறிவியாமற்போனால் துண்டித்துப்போடப்படுவீர்கள்; உங்கள் வீடுகள் எருக்களங்களாக்கப்படும். சொப்பனத்தையும் அதின் அர்த்தத்தையும் தெரிவித்தீர்களேயாகில், என்னிடத்தில் வெகுமதிகளையும் பரிசுகளையும் மிகுந்த கனத்தையும் பெறுவீர்கள்; ஆகையால் சொப்பனத்தையும் அதின் அர்த்தத்தையும் எனக்குத் தெரிவியுங்கள் என்றான். அவர்கள் மறுபடியும் பிரதியுத்தரமாக: ராஜா அடியாருக்குச் சொப்பனத்தைச் சொல்வாராக; அப்பொழுது அதின் அர்த்தத்தை விடுவிப்போம் என்றார்கள். அதற்கு ராஜா பிரதியுத்தரமாக என்னிடத்திலிருந்து தீர்மானம் பிறந்தபடியினாலே நீங்கள் காலதாமதம் பண்ணப்பார்க்கிறீர்களென்று நிச்சயமாக எனக்குத் தெரியவருகிறது. காலம் மாறுமென்று நீங்கள் எனக்குமுன்பாக பொய்யும் புரட்டுமான விசேஷத்தைச் சொல்லும்படி எத்தனம்பண்ணி இருக்கிறீர்கள்; நீங்கள் சொப்பனத்தை எனக்குத் தெரிவிக்காமற்போனால், உங்கள் எல்லாருக்கும் இந்த ஒரே தீர்ப்பு பிறந்திருக்கிறது; ஆகையால் சொப்பனத்தை எனக்குச் சொல்லுங்கள்; அப்பொழுது அதின் அர்த்தத்தையும் உங்களால் காண்பிக்கக்கூடுமென்று அறிந்துகொள்ளுவேன் என்றான். கல்தேயர் ராஜசமுகத்தில் பிரதியுத்தரமாக; ராஜா கேட்கும் காரியத்தை அறிவிக்கத்தக்க மனுஷன் பூமியில் ஒருவனும் இல்லை; ஆகையால் மகத்துவமும் வல்லமையுமான எந்த ராஜாவும் இப்படிப்பட்ட காரியத்தை ஒரு சாஸ்திரியினிடத்திலாவது ஜோசியனிடத்திலாவது கல்தேயனிடத்திலாவது கேட்டதில்லை. ராஜா கேட்கிற காரியம் மிகவும் அருமையானது; மாம்சமாயிருக்கிறவர்களோடே வாசம்பண்ணாத தேவர்களேயொழிய ராஜசமுகத்தில் அதை அறிவிக்கத்தக்கவர் ஒருவரும் இல்லை என்றார்கள்.**

இங்கு நாம் முழு உலகத்தையும் ஆண்டுவந்த அரசனாகிய நேபுகாத் நேச்சார் ஒரு சொப்பனத்தைக் கண்டு கலங்கினான்



என்றும், நடு இரவில் எழுந்த அவன் பின்பு உறக்கம் வராமல் தவித்ததையும் காண்கிறோம். மேலும், அந்த சொப்பனத்தை அவரால் ஞாபகத்தில் வைக்க முடியாமல் அவர் சிந்தையிலிருந்து அந்த சொப்பனம் தப்பிப்போயிற்றென்றும் காண்கிறோம்.

ஆனாலும், அந்த உணர்வுகளில் இருந்து மீளவும் முடியாத நிலையில் ராஜா (அந்த இராத்திரியிலே) உடனடியாக ஞானிகளை அழைக்க ஆட்களை அனுப்பினான். சாஸ்திரிகள், ஜோசியர், சூனியக்காரர், கல்தேயர் அனைவரும் அந்த சொப்பனத்தை சொல்லவும் அதின் அர்த்தத்தை விளக்கவும் வரவழைக்கப்பட்டார்கள்.

ஆனால் இந்தக் காரியத்தை ஒருவராலும் செய்யக் கூடாமல் போனது. அதற்கு பின்பு நடந்ததை அறிய கீழுள்ள வசனத்தை வாசிப்போம்.



### தானியேல் 2:12

**“ராஜா மகா கோபமும் உக்கிரமுங்கொண்டு, பாபிலோனில் இருக்கிற எல்லா ஞானிகளையும் கொலை செய்யும்படி கட்டளையிட்டான்.”**

பின்பு ராஜா மிகுந்த கோபம் அடைந்தவராக பாபிலோனில் உள்ள எல்லா ஞானிகளையும் அழிக்கும்படிக்கு கட்டளையிட்டான்.

அச்சமயம் தானியேலும் அவருடைய மூன்று நண்பர்களும் இந்த ராஜ்யத்தில் ஞானிகளாக இருந்தார்கள். ஆனால், இளைய ஞானிகளாக இருந்ததினால் அந்த சூழ் நிலையில் அவர்கள் அந்த இடத்தில் இல்லை. பின்பு,

## தானியேல் 2:14-16

**"பாபிலோனின் ஞானிகளைக் கொலை செய்யப் புறப்பட்ட ராஜாவினுடைய தலையாரிகளுக்கு அதிபதியாகிய ஆரியோகோடே தானியேல் யோசனையும் புத்தியுமாய்ப்பேசி: இந்தக் கட்டளை ராஜாவினால் இத்தனை அவசரமாய்ப் பிறந்ததற்குக் காரணம் என்ன என்று ராஜாவின் சேர்வைக்காரனாகிய ஆரியோகினிடத்தில் கேட்டான்; அப்பொழுது ஆரியோகு தானியேலுக்குக் காரியத்தை அறிவித்தான். தானியேல் ராஜாவினிடத்தில் போய், சொப்பனத்தின் அர்த்தத்தை ராஜாவுக்கு காண்பிக்கும்படித் தனக்குத் தவணை கொடுக்க விண்ணப்பம் பண்ணினான்."**



ஆரியோகு என்னும் ராஜாவின் சேர்வைக்காரன் மூலம் தானியேல் எல்லாவற்றையும் அறிந்து, அவர் ராஜாவிடம் இந்த காரியங்களை குறித்து அறிவிப்பதற்கு தவணை கேட்கிறார்.

அதற்கு பின்பு என்ன நடந்தது என்று வாசிப்போம்.

## தானியேல் 2:17-19

**"பின்பு தானியேல் தன் வீட்டுக்குப்போய், தானும் தன் தோழரும் பாபிலோனின் மற்ற ஞானிகளோடே அழியாதபடிக்கு இந்த மறைபொருளைக்குறித்து பரலோகத்தின் தேவனை நோக்கி இரக்கம் கேட்கிறதற்காக, அனனியா, மீஷாவேல், அசரியா என்னும் தன்னுடைய தோழருக்கு இந்தக் காரியத்தை அறிவித்தான். பின்பு இராக்காலத்தில் தரிசனத்திலே தானியேலுக்கு மறைபொருள் வெளிப்படுத்தப்பட்டது, அப்பொழுது தானியேல் பரலோகத்தின் தேவனை ஸ்தோத்தரித்தான்."**

தானியேலும் அவருடைய எபிரேய நண்பர்கள் அனனியா, மீஷாயேல், அசரியா, (சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்று



பாபிலோனில் அழைக்கப்பட்டார்கள்) ஒன்று கூடி தேவனை நோக்கி ஜெபித்தார்கள். இதன் விளைவாக, தானியேல் நித்திரை செய்யும் போது தேவன் அவருக்கு வெளிப்படுத்தினார். அடுத்த நாள் ராஜாவுக்கு முன்பாக தேவன் தானியேலுக்கு வெளிப்படுத்தின காரியங்களை விவரித்து சொல்லத் தொடங்கினார்.

## தானியேல் 2:28-30

**“மறை பொருள்களை வெளிப்படுத்துகிற பரலோகத்திலிருக்கிற தேவன் கடைசி நாட்களில் சம்பவிப்பதை ராஜாவாகிய நேபுகாத் நேச்சாருக்குத் தெரிவித்திருக்கிறார்; உம்முடைய சொப்பனமும் உமது படுக்கையின் மேல் உம்முடைய தலையில் உண்டான தரிசனங்களும் என்னவென்றால்: ராஜாவே, உம்முடைய படுக்கையின் மேல் நீர் படுத்திருக்கையில், இனிமேல் சம்பவிக்கப்போகிறதென்ன என்கிற நினைவுகள் உமக்குள் எழும்பிற்று; அப்பொழுது மறைபொருள்களை வெளிப்படுத்துகிறவர் சம்பவிக்கப்போகிற தை உமக்குத் தெரிவித்தார். உயிரோடிருக்கிற எல்லாரைப்பார்க்கிலும் எனக்கு அதிக ஞானம் உண்டென்பதினாலே அல்ல; அர்த்தம் ராஜாவுக்குத் தெரியவரவும், உம்முடைய**



**இருதயத்தின் நினைவுகளை நீர் அறியவும், இந்த மறைபொருள் எனக்கு வெளியாக்கப்பட்டது.”**

இந்தக் காரியங்களை விளக்குவதற்கு முன்பு தானியேல் இந்த சொப்பனத்தையும் அதன் விளக்கத்தையும் வெளிப்படுத்தின தேவனுக்கு கனம், மகிமையை ஏறெடுத்து, இந்த விஷயத்தில் தன்னுடைய ஞானத்தையோ, அறிவையோ உபயோகப் படுத்தவில்லை என்பதையும், தேவனே வெளிப்படுத்தினார் என்பதையும், ராஜாவுக்கு தெளிவாக விளக்கினார்.

**எப்பேர்பட்ட உதாரணம், புகழ்ச்சிக்குரிய இடத்திலும் அவர் எடுத்த தாழ்மையின் ரூபம் நமக்கு நல்ல பாடமாக இருக்கிறது!**

இப்படியாக தானியேல் பேசத் தொடங்கின பொழுது,

**தானியேல் 2:31-35**

**“ராஜாவே, நீர் ஒரு பெரிய சிலையைக்கண்டீர்; அந்தப் பெரிய சிலை மிகுந்த பிரகாசமுள்ளதாயிருந்தது; அது உமக்கு எதிரே நின்றது; அதின் ரூபம் பயங்கரமாயிருந்தது. அந்தச் சிலையின் தலை பசும்பொன்னும், அதின் மார்பும் அதின் புயங்களும் வெள்ளியும், அதின் வயிறும் அதின் தொடையும் வெண்கலமும், அதின் கால்கள் இரும்பும், அதின் பாதங்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாயிருந்தது. நீர் பார்த்துக்கொண்டிருக்கும்போதே, கைகளால் பெயர்க்கப்படாத ஒரு கல் பெயர்ந்து உருண்டுவந்தது; அது அந்தச் சிலையை இரும்பும் களிமண்ணுமாகிய அதின் பாதங்களில் மோதி அவைகளை நொறுக்கிப்போட்டது. அப்பொழுது அந்த இரும்பும் களிமண்ணும் வெண்கலமும் வெள்ளியும் பொன்னும் ஏகமாய் நொறுங்குண்டு, கோடைகாலத்தில் போரடிக்கிற களத்திலிருந்து பறந்துபோகிற பதரைப்போலாயிற்று; அவைகளுக்கு ஒரு இடமும் கிடையாதபடி காற்று அவைகளை அடித்துக்கொண்டுபோயிற்று; சிலையை மோதின கல்லோவென்றால், ஒரு பெரிய பர்வதமாகி பூமியையெல்லாம் நிரப்பிற்று.”**

இங்கு தானியேல் அந்த சொப்பனத்தை விவரித்து கூறுகிறார். அவர் ராஜா உலோகங்களால் உருவாக்கப்பட்ட ஒரு பெரிய பிரமாண்டமான சிலையை கண்டதாகவும், அது மிகுந்த பிரகாசமாக இருந்தது என்றும் கூறுகிறார்.

பின்பு இந்த சிலை நாலு உலோகங்களால் செய்யப்பட்டது என்றும், சிலையானது நாலு பாகங்களாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொன்றும் வேறுபட்ட உலோகங்களால் செய்யப்பட்டிருந்தது என்றும் கூறுகிறார்.

அதின் தலை பொன்னினாலும், அதின் மார்பும் புயங்களும் வெள்ளியினாலும், அதின் வயிறும், தொடையும் வெண்கலத்தினாலும், அதின் முழங்காலிலிருந்து கணுக்கால் வரைக்கும் இரும்பும், அதின் பாதங்களும் விரல்களும் இரும்பும் களிமண்ணும் கலந்து இருந்ததாகவும் கூறுகிறார்.



பின்பு ராஜாவைப் பார்த்து,

**“கைகளால் பெயர்க்கப்படாத”**

ஒரு கல் அந்த சிலையில் மோதி, அதை நொறுக்கி, நொறுக்கப்பட்ட தூசிகள் காற்றில் பறந்து போய் விட்டது என்றும்,

**“அந்த கல் ஒரு பெரிய பர்வதமாக வளர்ந்து பூமியை நிரப்பிற்று,”**

என்றும் ராஜா கண்டவைகளை குறிப்பிடுகிறார்.

**எப்படிப்பட்ட சொப்பனம்?**

**இந்த சொப்பனத்தின் பொருள் என்ன?**

மேலும் நாம் வாசிக்கும் பொழுது,

**தானியேல் 2:36**

**“சொப்பனம் இது தான், அதின் அர்த்தத்தையும் ராஜா சமுகத்தில் தெரிவிப்போம்.”**

இங்கு தானியேல் சொப்பனத்தின் விளக்கத்தைச் சொல்ல ஆரம்பிக்கிறார்.

**இந்த சிலையில் உள்ள நான்கு உலோகங்கள் என்ன?**

**அவை குறிப்பது... என்ன?**

**இந்தக் கல் எதை அடையாளப்படுத்துகிறது?**

**மேலும் இந்த கல் அந்தச் சிலையை ஏன் நொறுக்க வேண்டும்?**

இதற்கான பதிலை, கீழுள்ள வசனத்தில் வாசிக்கலாம்.

## தானியேல் 2:37-40

**“ராஜாவே, நீர் ராஜாதி ராஜாவாயிருக்கிறீர்; பரலோகத்தின் தேவன் உமக்கு ராஜரீகத்தையும் பராக்கிரமத்தையும் வல்லமையையும் மகிமையையும் அருளினார். சகல இடங்களிலுமுள்ள மனுபுத்திரரையும் வெளியின்மிருகங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும் அவர் உமது கையில் ஒப்புக்கொடுத்து, உம்மை அவைகளையெல்லாம் ஆளும்படி செய்தார். பொன்னான அந்தத் தலை நீரே. உமக்குப் பிறகு உமக்குக் கீழ்த்தரமான வேறொரு ராஜ்யம் தோன்றும். பின்பு பூமியையெல்லாம் ஆண்டு கொள்ளும் வெண்கலமான மூன்றாம் ராஜ்யம் ஒன்று எழும்பும். நாலாவது ராஜ்யம் இரும்பைப் போல உரமாயிருக்கும்; இரும்பு எல்லாவற்றையும் எப்படி நொறுக்கிச் சின்னாபின்னமாக்குகிறதோ, அப்படியே இது நொறுக்கிப்போடுகிற இரும்பைப்போல அவைகளையெல்லாம் நொறுக்கித்தகர்த்துப்போடும்.”**

இது உலகத்தை ஆளக்கூடிய நான்கு உலக சாம்ராஜ்யங்களை தேவன் மிக அழகாக சித்தரித்து இருக்கிறார்.

அந்த ராஜ்யங்களின் ஆளுகையும், அவர்களுடைய அடையாளங்களையும் கீழுள்ள படத்தில் காணலாம்.



இங்கு ரோம அரசாங்கம் உருமாற்றப்பட்டதை இரும்பும், களிமண்ணும் கலந்த பாதங்கள் அடையாளப்படுத்துகிறது.

இது **"இரும்புக்கும், களிமண்ணுக்கும்"** இடையில் உள்ள இசைவை குறிக்கிறது.

இதை நாம் கீழுள்ள வசனத்தை வாசித்து அறிந்து கொள்ளலாம்.

**தானியேல் 2:41-43**

**"பாதங்களும் கால் விரல்களும் பாதிகுயவனின் களிமண்ணும், பாதி இரும்புமாயிருக்க நீர் கண்டீரே, அந்த ராஜ்யம் பிரிக்கப்படும், ஆகிலும் களிமண்ணோடே இரும்பு கலந்திருக்க நீர் கண்டபடியே இரும்பினுடைய உறுதியில் கொஞ்சம் அதிலே இருக்கும். கால்விரல்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாயிருந்தது என்னவென்றால் அந்த ராஜ்யம் ஒரு பங்கு உரமும் ஒரு பங்கு நெரிசலுமாயிருக்கும். நீர் இரும்பைக் களிமண்ணோடே கலந்ததாகக் கண்டீரே, அவர்கள் மற்ற மனுஷரோடே சம்பந்தங்கலப்பார்கள். ஆகிலும் இதோ களிமண்ணோடே இரும்பு கலவாதது போல அவர்களும் ஒருவரோடொருவர் ஒட்டிக்கொள்ளாதிருப்பார்கள்."**

இங்கு இரும்போடு கலந்த களிமண்ணைக் குறித்து நாம் விவரமாக பார்ப்போம்.

**இரும்பு**

ரோம சாம்ராஜ்யத்தையும் அதனுடைய ஆளும் அதிகாரத்தையும்,

**களிமண்**

சபையையும், இந்த பூமியின் மேல் கிறிஸ்து வாக்களித்த ராஜ்யத்தையும் **(மத்தேயு 6:10)** ஸ்தாபிப்பதற்கு வேண்டிய அதிகாரம் பெற்றிருக்கிறதாக கூறிக்கொண்ட ரோம பிஷப்பையும் குறிக்கும்.

**ரோமாபுரியில் உள்ள சபை, ரோம ராஜ்யத்தின் பிரிவுகளோடு** (இன்றைக்கு "ஐரோப்பா" என்று அழைக்கப்பட்டு வருகிறதும் – விசேஷமாக பிரான்ஸ்) இணைந்து "பெப்பின்", சார்லிமேன் என்ற பேரரசர்களின் தலைமையில், வரலாற்றில் காண்பது போல **"பரிசுத்த ரோம அரசாங்கத்தை"** நிறுவினார்கள்.

**ஆகவே இரும்பும் களிமண்ணும் கலந்த பாதங்கள் "பரிசுத்த ரோம" அரசாங்கத்தை குறிக்கும்.**

## இரும்பும் களிமண்ணும் கலந்த 10 விரல்களின் பொருள் என்ன?

இவைகள் தன்னிச்சையாக செயல்படக்கூடிய ராஜ்யங்கள். இவர்கள் கிறிஸ்தவ ராஜ்யங்கள் அல்லது கிறிஸ்தவ மண்டலம் என்று அழைக்கப்பட்டு பின்னாளில் உலகமெங்கும் "காலனிகள்" அமைத்துக்கொண்டார்கள்.

உதாரணம் பிரிட்டிஷ் பேரரசு, பிரான்ஸ் பேரரசு, ஸ்பானிய பேரரசு என்பவைகள் ஆகும்.

### களிமண்

பாறையை போன்று பொய்யாய் தோற்றம் அளிப்பது போல் இந்த கிறிஸ்தவ மண்டலமும் தேவனுடைய ராஜ்யத்தைப் போல் தோற்றம் அளித்தாலும், **இது உண்மையான தேவனுடைய திட்டத்தின்படி அமைக்கப்பட்ட ராஜ்யமோ அல்லது கிறிஸ்துவின் ராஜ்யமோ அல்ல.**

## அதற்கு பின்பு என்ன நடந்தது?



நாம் தானியேலின் புஸ்தகத்தை தொடர்ந்து வாசிக்கலாம்.

### தானியேல் 2:44-45

**"அந்த ராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறு ஜனத்துக்கு விடப்படுவதில்லை; ஒரு கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து, உருண்டு வந்து, இரும்பையும் வெண்கலத்தையும் களிமண்ணையும் வெள்ளியையும் பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும். இனிமேல் சம்பவிக்கப்போகிறதை மகா தேவன் ராஜாவுக்கு தெரிவித்திருக்கிறார்; சொப்பனமானது நிச்சயம், அதின் அர்த்தம் சத்தியம் என்றான்."**

## இந்த கல் எதை குறிக்கிறது?

இது உண்மையான அதே சமயம், நீண்ட நாட்கள் ஜெபத்தில் எதிர்ப்பார்க்கப்பட்ட தேவனுடைய திவ்விய ராஜ்யம், பரலோகத்திற்குரியதென்பதும் பின்னாளில் “அந்த ராஜாக்களின் நாட்களில்” பூமியில் ஸ்தாபிக்கப்படும் என்று காண்கிறோம். (கைகளினால் பெயர்க்கப்படாத கல் ஒன்று)

ஆம், இந்த ராஜ்யம் மனுஷனால் ஏற்படுத்தப்படாமல் அது தேவனாலும் அவருடைய தெய்வீகத்தினாலும் ஏற்படுத்தப்படும்.

இந்த ராஜ்யம் இன்றைக்கு இருக்கக்கூடிய தீமையான உலக ராஜ்யங்களை முதலில் ஒரு முடிவுக்கு கொண்டுவந்த பின்பு,

**“அந்த கல் ஒரு பெரிய பர்வதமாக மாறி பூமியை நிரப்பிற்று”**

அதாவது பூமியிலே தேவனுடைய நீதியுள்ள ராஜ்யமும் அவருடைய சித்தமும் முழுமையாக ஸ்தாபிக்கப்படும்.

இப்படியாக, பரலோகத்தின் தேவன் நேபுகாத்நேச்சாருக்கு காண்பித்த சொப்பனத்தின் மூலம் மனித வரலாற்றில் தானியேலின் காலம் தொடங்கி இன்றைய காலம் வரை எழும் ராஜ்யங்களைக் குறித்து வெளிப்படுத்தினார்.

இப்பொழுது தானியேல் கண்ட சொப்பனத்தைக் குறித்து தானியேலின் புஸ்தகத்தில் உள்ள ஏழாம் அதிகாரத்தை வாசிக்கலாம்.

**தானியேல் 7:1,2**

**“பாபிலோன் ராஜாவாகிய பெல்ஷாத்சாரின் முதலாம் வருஷத்திலே தானியேல் ஒரு சொப்பனத்தையும் தன் படுக்கையின் மேல் தன் தலையில் தோன்றின தரிசனங்களையும் கண்டான். பின்பு அவன் அந்தச் சொப்பனத்தை எழுதி, காரியங்களின் தொகையை விவரித்தான். தானியேல் சொன்னது, இராத்திரி காலத்தில் எனக்கு உண்டான தரிசனத்திலே நான் கண்டது என்னவென்றால், இதோ வானத்தின் நாலு காற்றுகளும் பெரிய சமுத்திரத்தின் மேல் அடித்தது.”**

இங்கு வானத்தின் **“நான்கு காற்றுகள்”** சமுத்திரத்தின் மேல் அடித்தது, என்ற இந்த சொப்பனத்தின் துவக்கத்தை தீர்க்கதரிசியான தானியேல் சொல்லத் தொடங்கினார்.

### இதன் பொருள் என்ன?

இங்கு **வானம் என்பது பூமியில் ஆவிக்குரிய ஆளுகையை** அடையாளப்படுத்துகிறது. **“நான்கு காற்றுகள்” என்பது பூமிக்குரிய ஆளுகையை** அடையாளப்படுத்துகிறது.

**அவை சமுதாயம், அரசியல், பொருளாதாரம், மதம் ஆகும்**



இப்பொழுது வானம் மற்றும் நான்கு காற்றுகளின் கூட்டு ஆதிக்கம் சமுத்திரத்தின் மேல் அடித்தது என்று வாசித்தோம். இந்த காரியம் மனுக்குலம் இன்று இருக்கக்கூடிய பாவ, மரண நிலைமைக்கு அடையாளமாக சொல்லப்படுகிறது. இதைக் குறித்து நாம் ஏசாயாவின் புஸ்தகத்தில் வாசித்து அறியலாம்.

**ஏசாயா 57:20**

**"துன்மார்க்கரோ கொந்தளிக்கும் கடலைப்போலிருக்கிறார்கள்; அது அமர்ந்திருக்கக்கூடாமல், அதின் ஜலங்கள் சேற்றையும் அழுக்கையும் கரையில் ஒதுக்குகிறது."**

மேலும் வாசிக்கும்போது,

**தானியேல் 7:3**

**"அப்பொழுது வெவ்வேறு ரூபமுள்ள நான்கு பெரிய மிருகங்கள் சமுத்திரத்திலிருந்து எழும்பின."**

## இந்த நான்கு ஜீவன்கள் எதை அடையாளப்படுத்துகிறது?

இவை, தானியேல் புஸ்தகம் 2ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட, நான்கு உலகப்பேரரசுகளையே அடையாளப்படுத்துகிறது. இதை மீண்டும் வாசிக்கலாம்.

**தானியேல் 7:17**

**"அந்த நாலு பெரிய மிருகங்களும் பூமியிலிருந்து எழும்புகிற நாலு ராஜாக்கள்"**

பார்த்தீர்களா, இங்கு சொல்லப்பட்ட ஜீவன்களும் அதே நான்கு உலகப்பேரரசுகளை அல்லது ராஜ்யங்களைக் குறிப்பிடுகிறது. பின்பு நடந்தது என்ன என்று கீழுள்ள வசனத்தை வாசிக்கலாம்.

**தானியேல் 7:4**

**"முந்தினது சிங்கத்தைப்போல இருந்தது. அதற்குக் கழுகின் செட்டைகள் உண்டாயிருந்தது; நான் பார்த்துக்கொண்டிருக்கையில், அதின் இறகுகள் பிடுங்கப்பட்டது. அது தரையிலிருந்து எடுக்கப்பட்டு, மனுஷனைப்போல இரண்டு காலின்மேல் நிமிர்ந்து நிற்கும்படி செய்யப்பட்டது; மனுஷனின் இருதயம் அதற்குக்கொடுக்கப்பட்டது."**

### இதன் பொருள் என்ன? அல்லது இது எதை குறிக்கிறது?

இப்பொழுது இங்கு சொல்லப்பட்ட அடையாளங்களைக் குறித்த விளக்கத்தைப் பார்ப்போம்.




**"சிங்கத்தைப் போல"** → என்பது பாபிலோனுடைய வல்லமையையும், பராக்கிரமத்தையும் குறிக்கிறது. ஆனால், இந்த சிங்கத்திற்கு கழுகின் செட்டைகள் உண்டாயிருந்தது.

**"கழுகின் செட்டைகள்"** → என்பது பாபிலோன் அடைந்த உயர்வான வளர்ச்சியைக் குறிக்கிறது.

**(தானியேல் 4:22 - "உமது மகத்துவம் பெருகி <u>வான பரியந்தமும்</u> <u>உமது கர்த்தத்துவம்</u> பூமியின் எல்லை பரியந்தமும் எட்டியிருக்கிறது.")**

கழுகு மட்டுமே வானத்தின் மிக உயரமான அளவுக்கு பறக்கமுடியும். ஆகவே, உயர்ந்த நிலையில் இருக்கக்கூடிய பாபிலோனின் மகிமையை கழுகின் செட்டைகளுக்கு ஒப்பாக சொல்லப்படுகிறது. இந்த பாபிலோன் ராஜ்யத்தை சிங்கத்திற்கு ஒப்பிட்டால் மட்டும் போதாது. அதனுடைய **உயர்ந்த நிலைமையை** காண்பிக்க **"கழுகின் செட்டைகள்"** தேவைப்பட்டது.

**“நான் பார்த்துக்கொண்டு இருக்கையில்”** → இது பாபிலோன் ராஜ்யம் கடந்துவந்த காலப்பகுதியை குறிக்கிறது.

**“அதின் இறகுகள் பிடுங்கப்பட்டது”** → நேபுகாத்நேச்சாரின் ராஜரீக அதிகாரங்களும் மகிமையும் அவனிடமிருந்து எடுக்கப்பட்டதைக் குறிக்கிறது.

**தானியேல் 4:31**ல் வாசித்து அறிந்து கொள்ளலாம். **“....ராஜ்யபாரம் உன்னை விட்டு நீங்கிற்று”**

**“மனுஷ இருதயம் அதற்குக் கொடுக்கப்பட்டது** → ஏழு வருடங்கள் மிருகத்தைப் போல இருந்து, அனுபவங்களைப் பெற்று, தன்னைத் தாழ்த்தி பரலோகத்தின் தேவனை மகிமைப்படுத்தி துதி செலுத்தின அவருடைய அனுபவங்களைக் குறிக்கிறது. (தானியேல் 4:34-37)

இப்பொழுது நாம் இரண்டாம் மிருகத்தைப் பற்றி வாசிக்கலாம்.

**தானியேல் 7:5**

**“பின்பு, கரடிக்கு ஒப்பாகிய வேறே இரண்டாம் மிருகத்தைக் கண்டேன், அது ஒரு பக்கமாய் சாய்ந்து நின்று தன் வாயின் பற்களுக்குள்ளே மூன்று விலாவெலும்புகளைக் கவ்விக்கொண்டிருந்தது, எழும்பி வெகு மாம்சம் தின்னென்று அதற்குச் சொல்லப்பட்டது.”**

**மேதோ - பெர்சியா**



**"கரடிக்கு ஒப்பான"** → இது மேதோ-பெர்சியா ராஜ்யத்தை அடையாளப்படுத்துகிறதாயிருக்கிறது.

**ஏனென்று நீங்கள் கேட்கலாம்?**

**மேதோ-பெர்சியர்கள் "முற்றுகையிட்டு நாட்டைப்பிடிப்பதில்"** மிகத் தேறினவர்களாயிருந்தனர். இது கரடிகளின் "கரங்கள்" மிக இறுக்கமாக பிடித்து, உயிர் மூச்சை தடுத்து அவர்களுடைய ஜீவனை சரீரத்திலிருந்து போக்கிவிடுவதற்கு சமமாகும். அவர்கள் பட்டணத்தை முற்றுகை இடும்பொழுது அதை சுற்றி வளைப்பர். அதன் மூலம் உணவு மற்றும் தானியங்களின் போக்குவரத்தை தடை செய்து அவர்கள் தங்கள் தோல்வியை ஒப்புக்கொள்ளும் வரை அவர்களை முற்றுகையிட்டு ஜெயிப்பார்கள். இது கரடிகள் "கரங்கள்" ஆகும்.

→ **இந்த வகையில், மேதோ-பெர்சியா அரசு கரடிக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது.**

**"அது ஒரு பக்கமாய் சாய்ந்து நின்று"** → மேதியர்களைவிட பெர்சிய அரசர்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருந்ததை குறிக்கிறது. அதனுடைய **இரண்டு கரங்களும், மேதியர், பெர்சியருடைய ஐக்கியத்தைக் காட்டுகிறது.**

**"மூன்று விலாவெலும்புகளை கவ்விக் கொண்டிருந்தது"** → ஒரு மிருகம் மற்றொரு மிருகத்தை விழுங்குவது போல உலகத்தில் உள்ள சகல ஆளுகையும் பெற்றுக்கொள்வதற்கு முன்பு மேதோ-பெர்சியா சாம்ராஜ்யம் **மூன்று முக்கியமான ராஜ்யங்களை** கைப்பற்றியது. அவைகள்,

**1.எகிப்து ராஜ்யம்  2.லிதியா ராஜ்யம்  3.பாபிலோன் ராஜ்யம்**

**"எழும்பி வெகு மாம்சம் தின்னென்று"** → மேதோ-பெர்சியாவுக்கு பாபிலோனை முழுமையாக கைப்பற்றவும் அவர்களை ஆண்டுகொள்ளவும் கிடைத்த கட்டளை குறிக்கும்.

**தானியேல் 5:28,30,31**

**“பெரேஸ் என்பதற்கு, உன் ராஜ்யம் பிரிக்கப்பட்டு, மேதியருக்கும் பெர்சியருக்கும் கொடுக்கப்பட்டது என்றும் அர்த்தமாம் என்றான். அன்று இராத்திரியிலே கல்தேயரின் ராஜாவாகிய பெல்ஷாத்சார் கொலை செய்யப்பட்டான். மேதியனாகிய தரியு தன் அறுபத்திரண்டாம் வயதில் ராஜ்யத்தைக் கட்டிக்கொண்டான்.”**

இப்போது மூன்றாவது மிருகத்தைப் பார்க்கலாம்.

**தானியேல் 7:6**

**“அதன் பின்பு சிவிங்கியைப்போலிருக்கிற வேறொரு மிருகத்தைக் கண்டேன், அதின் முதுகின் மேல் பட்சியின் செட்டைகள் நாலு இருந்தது; அந்த மிருகத்துக்கு நாலு தலைகளும் உண்டாயிருந்தது, அதற்கு ஆளுகை அளிக்கப்பட்டது.”**




இங்கு சிவிங்கி என்பதற்கு பதிலாக சிறுத்தை என்றே இருக்கவேண்டும். இதை (NIV) மொழி பெயர்ப்பில் உறுதி செய்யலாம்.

**இது கிரேக்க ராஜ்யத்திற்கு அடையாளமாக இருக்கிறது.**

**“சிறுத்தைப் போலிருக்கிற”**

இந்த ராஜ்யம் மிக வேகமாக உலகத்தில் ஸ்தாபிக்கப்பட்டதால் இது சிறுத்தைக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. இங்கு சிறுத்தை என்பது கிரேக்க அரசனாகிய **மகா அலெக்சாண்டர்** உலகத்தை கைப்பற்றி ஆட்சி அமைத்த வேகத்திற்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. பூமியில் சிறுத்தையைப் போல் வேகமாக செல்லும் மிருகம் வேறு எதுவும் இல்லை.

**“முதுகின் மேல் பட்சியின் செட்டைகள் நாலு இருந்தது”**

மகா அலெக்சாண்டருக்கு இந்த ஆட்சியைப் பிடிப்பதற்கு உதவியாக இருந்த நாலு படைத்தளபதிகளை நாலு செட்டைகள் எடுத்துக் காட்டுகிறது. இந்த நாலு தளபதிகளும் சிறுத்தையைப் போல் வேகமாக ஓடுவதற்கு மட்டும் அல்லாமல் அவர்கள் தங்கள் கால்படாமல் ஆகாயத்தில் பறந்து உலகத்தைக் கைப்பற்ற உதவினார்கள்.

**“அதற்கு நாலு தலைகள் உண்டாயிருந்தது”**

இவர் ராஜ்யத்தை ஸ்தாபித்த பின்பு 32 வயதில் இறந்ததையும் அவருக்குப் பிள்ளைகளோ, பங்காளிகளோ இல்லாததினால் அந்த ராஜ்யம் நாலு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு அவருடைய நாலு தளபதிகளும், ஒவ்வொரு பிரிவுக்கும் அரசரானதைக் குறிக்கும்.

1. **தளபதி கெசண்டர் மக்கதோனியா, கிரேக்க பட்டணம்**
2. **தளபதி லிசிமேகஸ் ஆசியா (மைனர்) தீரேஸ்**
3. **தளபதி நிகேட்டர் மெசபத்தோமியா, சிரியா**
4. **தளபதி டாலமி எகிப்து, பாலஸ்தீனா**

நாலாவது மிருகத்தைப் பற்றி வாசிக்கலாம்.

## தானியேல் 7:7

**“அதற்குப்பின்பு, இராத்தரிசனங்களில் நாலாம் மிருகத்தைக் கண்டேன்; அது கெடியும் பயங்கரமும் மகா பலத்ததுமாயிருந்தது; அதற்குப் பெரிய இருப்புப்பற்கள் இருந்தது; அது நொறுக்கிப் பட்சித்து, மீதியானதைத் தன் கால்களால் மிதித்துப்போட்டது; அது தனக்கு முன்னிருந்த எல்லா மிருகங்களைப்பார்க்கிலும் வேற்றுருவமாயிருந்தது, அதற்குப் பத்துக் கொம்புகள் இருந்தது.”**




இந்த கெடியும், பயங்கரமும் மகாபலத்ததுமாயிருந்த மிருகம் பூமியில் தோன்றிய நாலாவது பேரரசாகிய **ரோம அரசுக்கு** அடையாளமாயிருக்கிறது.

**“மகா பலத்ததுமாயிருந்தது”**

இது ரோம அரசாங்கத்தின் இராணுவ அதிகாரத்தை சுட்டிக்காட்டுகிறது. வேறு எந்த அரசாங்கத்திற்கும் இப்படிப்பட்ட ஒரு இராணுவம் இருந்ததில்லை.

**“பெரிய இருப்புப்பற்கள் இருந்தது”**

ஒரு மிருகம் அதனுடைய எதிராளிகளை தாக்குவதற்கு அதனுடைய பற்களை உபயோகப்படுத்துவதைப் போல், ரோம அரசாங்கம் அதனுடைய போர் ஆயுதங்களை மிக உறுதியாக இரும்பில் செய்திருந்ததை அடையாளப்படுத்துகிறது. இப்படிப்பட்ட ஒரு வலிமையான பாதுகாப்பை எந்த அரசாங்கமும் ஏற்படுத்தினதில்லை.

**“அதற்கு பத்துக் கொம்புகள் இருந்தது”**

இவ்வளவு பெரிதான ரோம ராஜ்யம் 10 பிரிவுகளால் பிரிக்கப்பட்டு அவைகளை பத்து அரசர்கள் ஆண்டு வந்தார்கள்.

உதாரணமாக – பாலஸ்தீனாவை ஏரோது அரசன் ஆண்டுவந்தான். (லூக்கா 23:7, அப்போஸ்தலர் 25:13) மேலும் வாசிக்கலாம்.

**தானியேல் 7:8**

**"அந்தக் கொம்புகளை நான் கவனித்திருக்கையில், இதோ, அவைகளுக்கு இடையிலே வேறொரு சின்ன கொம்பு எழும்பிற்று; அதற்கு முன்பாக முந்தின கொம்புகளில் மூன்று பிடுங்கப்பட்டது; இதோ, அந்தக் கொம்பிலே மனுஷகண்களுக்கு ஒப்பான கண்களும் பெருமையானவைகளைப் பேசும் வாயும் இருந்தது."**

## இவைகள் எதை அடையாளப்படுத்துகிறது?

**"அந்தக் கொம்புகளை நான் கவனித்திருக் கையில்"** → இது ரோம சாம்ராஜ்யம் கடந்து வந்த ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியைக் காட்டுகிறது. இதற்குப் பின்பு ஏதோ சில காரியங்கள் நடந்திருக்க வேண்டும்.

**"வேறொரு சின்ன கொம்பு எழும்பிற்று"** → இது ரோம அரசாங்கத்தின் பிரிவிலிருந்து ஒரு சிறு பிரிவு எழும்பியதை அடையாளப்படுத்துகிறது.

**"அதற்கு முன்பாக முந்தின கொம்புகளில் மூன்று பிடுங்கப்பட்டது"** → இது ரோம அரசாங்கத்தின் மூன்று பிரிவுகளின் வீழ்ச்சியைக் காட்டுகிறது – **ஹெருலி, கிழக்கு எக்ஸ்ராகேட், ஆஸ்ட்ராகோத்ஸ்** இவைகளுடைய வீழ்ச்சி அந்த சிறிய கொம்புக்கு வழியை ஆயத்தம் செய்தது.

→ **இந்த சிறிய கொம்பு எதை** அல்லது **யாரைக் குறிக்கிறது?**

இது ரோம அரசாங்கத்திலிருந்து எழும்பின ஒரு அதிகாரமுள்ள சக்தியாகிய பிஷப்பை அடையாளப்படுத்துகிறது. இவர் ஒரு வித்தியாசமான முறையில் அரசாங்கத்தை ஸ்தாபிக்க முயற்சி செய்தார்.

**"இந்த கொம்பிலே மனுஷ கண்களுக்கு ஒப்பான கண்களும் பெருமையானவைகளை பேசும் வாயும் இருந்தது."**

ரோமாபுரியில் உள்ள பிஷப் மிக தந்திரமாகவும், ஞானமான முறைகளை உபயோகப்படுத்தி ஆளுகையை கைப்பற்ற மிகப்பெரிய தெய்வீகத்துவத்தை தேவ வசனங்கள் மூலமாக ஏற்படுத்திக்கொண்டு, தேவனுடைய ராஜ்யத்தை பூமியில் ஸ்தாபிக்கப்போவதாக பறைசாற்றினதைக் குறிக்கும்.

## இப்படியாக போப் மார்க்கம் பிறந்தது

ஒவ்வொரு போப்பும் ஒரு ராஜாவைப் போல இருந்தார்கள். இவர்கள் மதத்தின் மேலும் ராஜ்யத்தின் மேலும் அதிகாரம் செலுத்தினார்கள். மற்ற எந்த ராஜாக்களும் (கொம்புகள்) இப்படி செய்ததில்லை. இப்படியாக இந்த சிறிய கொம்பு போப்பின் ஆளுகையை அடையாளப்படுத்துகிறது.

இந்த விசித்திரமான ஆளுகை கி.பி.799ல் பரிசுத்த ரோம சாம்ராஜ்யமாக ஸ்தாபிக்கப்பட்டு பின்பு, ஐரோப்பாவில் உள்ள அரசாங்கங்களும் பேரரசர்களும் போப்புவின் ஆளுகைக்கு உட்படுத்தப்பட்டார்கள்.

தொடர்ந்து வாசிக்கையில்,

### தானியேல் 7:9

**“நான் பார்த்துக்கொண்டிருக்கையில், சிங்காசனங்கள் வைக்கப்பட்டது; நீண்ட ஆயுசுள்ளவர் வீற்றிருந்தார், அவருடைய வஸ்திரம் உறைந்த மழையைப்போலவும் இருந்தது, அவருடைய சிரசின் மயிர் வெண்மையாகவும் பஞ்சைப்போல துப்புரவாகவும் இருந்தது. அவருடைய சிங்காசனம் அக்கினி ஜுவாலையும், அதின் சக்கரங்கள் எரிகிற நெருப்புமாயிருந்தது.”**

### இங்கு “நீண்ட ஆயுசுள்ளவர்” என்பவர் யார்?

இது, பிதாவாகிய தேவன் நியாயத்தீர்ப்பு அளிக்கப்போகிறதை அடையாளமாக காண்பிக்கிறது. மேலும், அவருடைய நியாயத்தீர்ப்பைக் குறித்து என்ன வாசிக்கிறோம் என்றால்,

### தானியேல் 7:12

**“மற்ற மிருகங்களுடைய ஆளுகையோவென்றால், அவைகளை விட்டு நீக்கப்பட்டது; ஆனாலும் அவைகளுக்கு காலமும் சமயமும் ஆகுமட்டும் அவைகள் உயிரோடே இருக்கும்படி கட்டளையிடப்பட்டது.”**

ஆம், பூமியின் மேல் உள்ள இந்த “மிருகங்களின்” அல்லது ராஜ்யங்களின் ஆளுகைகளையும் நீக்கி விட்டு அதற்கு உரியவரிடம் கொடுக்கிறார்.

## தானியேல் 7:13

**“இராத்தரிசனங்களிலே நான் பார்த்துக்கொண்டிருக்கையில், இதோ, மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார்; அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து அவர் சமீபத்தில் கொண்டுவரப்பட்டார்.”**

### இந்த வசனத்தில் சொல்லப்பட்டவர் யார்?

இது பிதாவினிடத்திற்கு வரவழைக்கப்பட்ட நம்முடைய ஆண்டவராகிய இயேசுவை குறிக்கும். தொடர்ந்து வாசிப்போம்.

## தானியேல் 7:14

**“சகல ஜனங்களும் ஜாதியாரும், பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி, அவருக்கு கர்த்தத்துவமும், மகிமையும், ராஜரீகமும் கொடுக்கப்பட்டது; அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்தியத்துவமும், அவருடைய ராஜ்யம் அழியாததுமாயிருக்கும்.”**



அவருக்கு **கர்த்தத்துவமும், மகிமையும், ராஜரீகமும்** கொடுக்கப்பட்டது. சகல ஜாதிகளும் அவரை சேவித்தார்கள். அவருடைய ராஜ்யம் நீங்காத நித்திய ராஜ்யமும் என்றைக்கும் அழியாததுமாயிருக்கும்.

**ஆம், இவருடைய ராஜ்யமே ஐந்தாம் உலகப்பேரரசாக இருக்கும்.**

தொடர்ந்து வாசிக்கும்போது,

**தானியேல் 7:27**

**"வானத்தின் கீழேங்குமுள்ள ராஜ்யங்களில் ராஜரீகமும் ஆளுகையும் மகத்துவமும் உன்னதமானவருடைய பரிசுத்தவான்களாகிய ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்; அவருடைய ராஜ்யம் நித்திய ராஜ்யம்; சகல கர்த்தத்துவங்களும் அவரை சேவித்து, அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும் என்றான்."**

ஆம், இந்த தேவனுடைய ராஜ்யமும், பரிசுத்தவான்களுக்கு கொடுக்கப்படும் ராஜ்யமுமாயிருக்கும். இதன் மூலம் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அவருடைய சபைக்கு கொடுத்த வாக்குத்தத்தமும் நிறைவேறும்.

**லூக்கா 22:29**

**"ஆகையால் என் பிதா எனக்கு ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்தினது போல நானும் உங்களுக்கு ஏற்படுத்துகிறேன்."**

ஆம், இயேசு தேவனிடத்திலிருந்து பெற்ற ராஜ்யத்தின் ஒரு பங்கை அவருடைய சரீரமாகிய சபைக்கு தருகிறார். இயேசுவின் இரண்டாம் வருகையில், பூமியில் அவர் ஆட்சி ஸ்தாபிக்கப்படும்போது, இந்த காரியங்கள் நிறைவு அடையும். **(மத்தேயு 6:10)**

**அப்படியானால் சபையின் ஆளுகை இக்காலத்திற்குரியவை அல்ல!**

மாறாக, தற்போது கிறிஸ்துவின் அடிச்சுவட்டில் நடந்து அதன் மூலம் வரக்கூடிய துன்பங்களை அனுபவித்து அவருடைய சாயலை அணிய அழைக்கப்பட்டிருக்கிறோம். இதை கீழுள்ள வசனத்தில் வாசித்து விளக்கமாக பார்க்கலாம்.

## 2 தீமோத்தேயு 2:12

**“அவரோடுகூடப் பாடுகளை சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்.”**

## அப்போஸ்தலர் 14:22

**“சீஷருடைய மனதை திடப்படுத்தி, விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படி அவர்களுக்கு புத்திசொல்லி, நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டுமென்று சொன்னார்கள்.”**

## வெளிப்படுத்தல் 3:21

**“நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடே கூட உட்கார்ந்தது போல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள் செய்வேன்.”**

**இந்தக் காரியங்களை அநேகர் மிகவும் தவறாகப் புரிந்துகொண்டு இயேசுவுக்கு முன்பாக ஆட்சியை செய்ய ஆரம்பித்தார்கள்!**

இதுவே **“களிமண்ணும்“** அந்த சிறிய **“கொம்புமாம்”.**

ஆனால், தேவனுடைய ராஜ்யம் இயேசுவின் இரண்டாம் வருகையில் ஸ்தாபிக்கப்படும். அப்பொழுது அவருடைய விசுவாசமுள்ள சீஷர்கள் அவரைப்போலவும் அவரோடும் இருப்பார்கள் என்றும் வாசிக்கிறோம்.

## மத்தேயு 25:31

**“அன்றியும் மனுஷ குமாரன் தனது மகிமைப்பொருந்தினவராய் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார்.”**

ஆம், இதுவே இயேசுவும் அவருடைய சபையும் மகிமையில் வருவதாகும். நாம் இப்பொழுது தானியேலுடைய சொப்பனத்தில் எங்கு இருக்கிறோம் என்று பார்க்கலாம்.

**ஆம், இன்றைக்கு நம் மத்தியில் எந்த ராஜாக்களும் இல்லை. எல்லா ராஜ்யங்களும் மறைந்துவிட்டது ஏன்?**



ஏனென்றால் நாம் அனைவரும் இந்த உலக ராஜ்யங்களின் ஆளுகையின் முடிவில் இருக்கிறோம். அதே சமயம் நாம் இன்றைக்கு ஐந்தாம் உலகப்பேரரசின் வாசற்படியில் நின்றுகொண்டு இருக்கிறோம்.

மேலும், இதனோடு இன்றைக்கு நடக்கக்கூடிய காரியங்களைப் பற்றி வாசிக்கலாம்.

**சங்கீதம் 110:5**

**"....தமது கோபத்தின் நாளிலே ராஜாக்களை வெட்டுவார்."**

ஆம், எல்லாவிதமான சர்வாதிகாரமும், ராஜ்யங்களும் பூமியிலிருந்து காணாமல் போனது. அதற்குப் பின்பு

**"அவர் ஜாதிகளுக்குள் நியாயந்தீர்ப்பார்; எல்லா இடங்களையும் பிரேதங்களால் நிரப்புவார்...."**

**- சங்கீதம் 110:6**



இந்த கடைசி 75 வருடங்களாக அநேக மக்கள் உயிர் இழந்து இருக்கிறார்கள். இதுபோல முன்பு ஒரு காலமும் நடந்ததில்லை.



யுத்தங்களுக்கு மேல் யுத்தங்கள்..... நாம் முதலாம் உலகப்போர், இரண்டாம் உலகப்போர், வியட்நாம் போர், ஈரான் ஈராக் போர் இப்படி அநேகப் போர்களை சந்தித்திருக்கிறோம்.

அநேக நாடுகளில் புரட்சிகள் உண்டாயிருக்கிறது. இதுவும் இல்லாமல் அநேக சுதந்திர போராட்டங்கள் நடந்து கொண்டு கொண்டு வருகிறது. அநேக நூறாயிரம் மக்கள் இந்தப் போர்களில் உயிர் இழந்து நிச்சயமாக எல்லா இடங்களும் (நாடுகள்) பிரேதங்களால் நிரப்பப்பட்டது.

**அரசர்களுடைய ஆட்சிக்குப்பின்பு தேவன் அநேக ஆளுகை முறைகளை அனுமதித்தார். ஆனால் அனைத்தும் சுய நலத்தினாலும் பேராசையினாலும் தோல்வி அடைந்தது!**

இதுவரைக்கும் இருந்த ஆளுகை முறைகளை ஒவ்வொன்றாக பார்ப்போம்.

# Communism

## கம்யூனிசம்

சீனா, ரஷ்யா, ஐரோப்பாவில் சில பகுதிகளில் இந்த முறை கையாளப்பட்டது. இவ்விதமான அரசாங்கம் சமாதானத்தையும் வளர்ச்சியையும் கொண்டுவருமென்று எதிர் பார்த்தார்கள்.

### ஆனால், நடந்தது என்ன?

ரஷ்யா துண்டுதுண்டாக உடைந்து கம்யூனிசம் ஒரு முடிவுக்கு வந்தது. அதே போல் மற்ற நாடுகளிலும் அதன் ஆளுகை முடிவு அடைந்தது. இன்றைக்கு சீனாவிலும் முடிவுக்கு வந்துகொண்டிருக்கிறது.

# Socialism

## சோசியலிஸம்

இந்த முறைகூட பிரயோஜனம் அற்றதாக தன்னை நிரூபித்தது.

# Democracy

உலகத்தில் உள்ள பெரிய எடுத்துக்காட்டாக நம்முடைய இந்தியா உள்ளது. முதலில் காங்கிரஸ் என்ற ஒரே கட்சி இருந்தது. அது வெகு காலமாக ஆட்சி அமைத்துக்கொண்டு வந்தது.

### பின்பு நடந்தது என்ன?

பி.ஜே.பி.க்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. அதற்குப்பின்பு கூட்டு ஆட்சி முறையில் இன்றும் நம் இந்தியா ஆட்சி அமைத்துக்கொண்டிருக்கிறது. அனைவரும் முயற்சி செய்தாலும், எந்த பிரச்சனையையும் தீர்க்க முடியாமல் தோல்வி அடைந்து கொண்டிருக்கின்றனர்.

தீர்க்கதரிசனத்தில் இதைக் குறித்த காரியங்களை தெளிவாக பார்க்கலாம்.

## ஆமோஸ் 5:19

**“சிங்கத்துக்குத் தப்பினவனுக்குக் கரடி எதிர்ப்பட்டது போலவும், அல்லது வீட்டுக்குள்ளே வந்து சுவரின் மேல் தன் கையை வைத்த போது பாம்பு அவனைக் கடித்ததுபோலவும் இருக்கும்.”**

### இவ்வசனத்தின் பொருள் என்ன?

நாம் இப்பொழுது இந்த தீர்க்கதரிசனத்தின் விளக்கத்தைப்பார்ப்போம். நாம் இருக்கக்கூடிய காலத்தில் நடந்து வரும் காரியங்களை தீர்க்கதரிசனம் தெளிவாகக் காட்டுகிறது. இது அரசர்களின் காலத்திற்கு பிறகு எழும்பின ஆளும் சக்திகளை பற்றி எடுத்துக்காட்டுகிறது.

### “மனிதன்”

என்பது உலகத்திலுள்ள முழு மனுக்குலத்தையும் அடையாளப்படுத்துகிறது. ..... (உலகத்திலுள்ள சகல ஜாதிகளும்)

### “சிங்கம்”

இது பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சின்னமாக இருக்கிறது. இந்த மாபெரும் சர்வாதிகாரம், முதலாம் உலகப்போருக்குப்பின்பாக உடைந்தது.

### “கரடி”

இது ரஷ்யாவில் உள்ள கம்யூனிஸத்தைக் குறிப்பதாக இருக்கிறது. (கம்யூனிஸ்ட் ரஷ்யாவின் அடையாளச்சின்னம்) இந்த அரசாங்கமும் திருப்தி படுத்தக்கூடாமல் தோல்வி அடைந்தது.

### “வீடு”

இது மக்கள் ஆட்சி முறையை குறிக்கிறது. இது மக்களுக்காகவும், மக்களாலும் ஸ்தாபிக்கப்பட்ட அரசாங்கம். எனவே, இந்த அரசாங்கம் ஒரு வீட்டுக்குள் இருப்பது போல் இருக்கிறது.

### “சுவரின் மேல் தன் கையை வைத்தபோது”

இது, இந்த முறையின் துவக்கம் பாதுகாப்பாக தோன்றியதையும், “ஏற்ற முறையாக” இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டதை குறிக்கும்.

## “பாம்பு கடித்தது”

சுய நலம், பேராசை என்ற சாத்தானின் குணங்களால் இந்த மக்களாட்சி முறையும் கெடுக்கப்பட்டு தோல்வி அடைவதை குறிக்கிறது.

**ஆம், மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட எல்லா அரசாங்கங்களும் தோல்வியையே சந்திக்கும். ஆகவே, தேவனுடைய ராஜ்யமே இதற்கான ஒரே பதில்!**

ஏனென்றால், நாம் தீர்க்கதரிசனத்தில் வாசிக்கும்போது

### ஆகாய் 2:7

**“சகல ஜாதிகளையும் அசையப்பண்ணுவேன்; சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர் வருவார். இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப்பண்ணுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.”**

ஆம், சகல ஜாதிகளாலும் விரும்பப்படும் ராஜ்யம் தேவனுடைய ராஜ்யம். உலக மக்கள் அனைவரும் விரும்பக்கூடிய இந்த ராஜ்யம் சமாதானத்தையும் ஜீவனையும் சந்தோஷத்தையும் கொண்டு வரும்.

**நாம் வரக்கூடிய தேவனுடைய மகிமையான ராஜ்யத்தைக் குறித்து சற்று சிந்தனையை செலுத்துவோம்.**

**சாத்தானும் அவனுடைய அதிகாரங்களும் கட்டப்பட்டு, நீக்கப்படும்.**

### வெளிப்படுத்தல் 20:2,3

**“பிசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் வருஷமளவும் கட்டிவைத்து, அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும் வரைக்கும் அது ஜனங்களை மோசம் போக்காதபடிக்கு அதை பாதாளத்தில் தள்ளி அடைத்து, அதின் மேல் முத்திரை போட்டான்.”**

**ஜனங்களுடைய மனக்கண்களும் காதுகளும் திறக்கப்படும்.**

## ஏசாயா 29:18

"அக்காலத்திலே செவிடர் புஸ்தகத்தின் வசனங்களை கேட்பார்கள். குருடரின் கண்கள் இருளுக்கும் அந்தகாரத்துக்கும் நீங்கலாகிப் பார்வை அடையும்."

**பூமியில் இருக்கக்கூடிய ஜனங்கள் தேவனை அறிகிற அறிவினால் நிறைந்திருப்பார்கள்.**

## சகரியா 14:9

"அப்பொழுது கர்த்தர் பூமியின்மீதெங்கும் ராஜாவாயிருப்பார்; அந்நாளில் ஒரே கர்த்தர் இருப்பார், அவருடைய நாமமும் ஒன்றாயிருக்கும்."

## ஆபகூக் 2:14

"சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல், பூமி கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்."

**சகல ஜாதிகளும் மனப்பூர்வமாக தேவனிடத்தில் கூடிவந்து, அவரிடத்தில் கற்றுக்கொண்டு கீழ்ப்படிந்து இருப்பார்கள்.**

## சங்கீதம் 22:27,28

"பூமியின் எல்லைகளெல்லாம் நினைவுகூர்ந்து கர்த்தரிடத்தில் திரும்பும்; ஜாதிகளுடைய சந்ததிகளெல்லாம் உமது சமூகத்தில் தொழுது கொள்ளும். ராஜ்யம் கர்த்தருடையது; அவர் ஜாதிகளை ஆளுகிறவர்."

## ஏசாயா 2:2

"கடைசி நாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்படும், எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள்."

**சகல விதமான யுத்தங்கள் நிறுத்தப்பட்டு தற்காப்பு படைகள் அனைத்தும் ஒழிந்து போகும்.**

## மீகா 4:3

"அவர் திரளான ஜனங்களுக்குள் நியாயந்தீர்த்து, தூரத்திலுள்ள

பலத்த ஜாதிகளை கடிந்து கொள்வார். அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண் வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள்; ஒரு ஜாதிக்கு விரோதமாய் மறு ஜாதி பட்டயம் எடுப்பதில்லை; இனி அவர்கள் யுத்தத்தை கற்பதுமில்லை."

**பிரேதக்கல்லறைகளிலிருந்து மக்கள் திரும்ப எழுந்து வருவார்கள்.**

## ஏசாயா 35:10

"கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி, ஆனந்த களிப்புடன் பாடி, சீயோனுக்கு வருவார்கள்; நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின்மேலிருக்கும்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள்; சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்."

**வயது சென்ற நிலைமையிலிருந்து அனைவரும் வாலிபத்திற்குத் திரும்பி பூரணப்படுவார்கள்.**

## யோபு 35:25

"அப்பொழுது அவர்கள் மாம்சம் வாலிபத்தில் இருந்ததைப் பார்க்கிலும் ஆரோக்கியம் அடையும், தன் வாலவயது நாட்களுக்குத் திரும்புவான்."

**வீட்டுப்பிரச்சனைகள் தீர்க்கப்பட்டு அவரவர் சொந்த வீட்டில் குடியிருப்பார்கள்.**

## ஏசாயா 65:21

"வீடுகளைக்கட்டி அவைகளில் குடியிருப்பார்கள், திராட்சத்தோட்டங்களை நாட்டி அவைகளின் கனியை புசிப்பார்கள்."

**வியாதிகள் நீக்கப்படுவதினால், மருத்துவமனைகள், மருந்துகள், ஊசிகள் இருக்காது.**

## ஏசாயா 33:24

"வியாதிப்பட்டிருக்கிறேன் என்று நகரவாசிகள் சொல்வதில்லை, அதில் வாசமாயிருக்கிற ஜனத்தின் அக்கிரமம் மன்னிக்கப்பட்டிருக்கும்."

**பாலைவனங்கள் பூத்து செழித்து பூந்தோட்டங்களாகும்.**

## ஏசாயா 35:7

"வெட்டாந்தரை தண்ணீர் தடாகமும், வறண்ட நிலம் நீரூற்றுகளுமாகும், வலுசர்ப்பங்கள் தாபரித்துக்கிடந்த இடங்களிலே புல்லும் கொருக்கையும் நாணலும் உண்டாகும்."

**காட்டு மிருகங்கள் மனிதர்களோடு அன்பாக பழகி அவர்களோடு தாபரித்து, பிள்ளைகளோடும் மகிழ்ச்சியாக இருக்கும்**

## ஏசாயா 11:6,7,8

"அப்பொழுது ஓநாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும், புலி வெள்ளாட்டுக்குட்டியோடே படுத்துக்கொள்ளும் கன்றுக்குட்டியும், பாலசிங்கமும், காளையும் ஒருமித்திருக்கும், ஒரு சிறு பையன் அவைகளை நடத்துவான். பசுவும் கரடியும் கூடி மேயும். அவைகளின் குட்டிகள் ஒருமித்துப் படுத்துக்கொள்ளும், சிங்கம் மாட்டைப்போல் வைக்கோல் தின்னும். பால் குடிக்குங்குழந்தை விரியன் பாம்பு வலையின்மேல் விளையாடும், பால் மறந்த பிள்ளை கட்டுவிரியன் புற்றிலே தன் கையை வைக்கும்."

**மரணம் நீக்கப்பட்டு அதனுடைய வேதனைகளும், உபத்திரவங்களும் முடிவடையும்.**

## வெளிப்படுத்தல் 21:4

"அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார், இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது."

**உலகத்தில் சமாதானம் நிலவி, அனைவரும் மகிழ்ச்சியோடு பாடுவார்கள்.**

## ஏசாயா 14:7

"பூமி முழுவதும் இளைப்பாறி அமைந்திருக்கிறது. கெம்பீரமாய் முழங்குகிறார்கள்."

தேவனுடைய ராஜ்யம் பூமியில் ஸ்தாபிக்கப்படுவதற்கு உணர்வுள்ள இருதயத்தோடு நாம் ஜெபிப்போமாக.

**"உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பூமியிலேயும் செய்யப்படுவதாக"**

# ....ஆமென்...

For Private Circulation Only




NOT FOR SALE

For more Subjects contact: MESSENGERS OF CHRIST  E-mail: thekingdom1_6@yahoo.com